## சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – தமிழிலேயே பெயர் சூட்டப்படும் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்தல் – அடிப்படைத் தகுதிகள் திருத்தம் செய்து ஆணை வெளியிடப்பட்டது – புதிய தனிக்குழு நியமன ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை**

அரசாணை (நிலை) எண்:002 | நாள்: 03.01. 2012.
மார்கழி –18
திருவள்ளுவர் ஆண்டு–2042

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண். 72, வணிகவரி(ம)பதிவுத்துறை, நாள் 22.7.2006.
2. அரசாணை (நிலை) எண். 147, வணிகவரி(ம)பதிவுத்துறை, நாள் 20.11.2006.
3. அரசாணை (நிலை) எண். 85, வணிகவரி(ம)பதிவுத்துறை, நாள் 30.3.2007.
4. அரசாணை (நிலை) எண். 159, வணிகவரி(ம)பதிவுத்துறை, நாள் 22.8.2007.
5. அரசாணை (நிலை) எண். 89, வணிகவரி(ம)பதிவுத்துறை, நாள் 21.7.2011.

-------

**ஆணை :**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழிலேயே பெயர் சூட்டப்படும் புதிய திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்கு அளிக்கப்பட்டது. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கேளிக்கை வரிவிலக்கு பழைய திரைப்படங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ் திரைப்படங்களில் காப்புரிமை வைத்திருப்போருக்கும் கேளிக்கை வரிவிலக்கு நீட்டிக்கப்பட்டது. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கேளிக்கை வரிச்சலுகை பெற, திரையிடப்படும் பழைய மற்றும் புதிய திரைப்படங்களின் தமிழ் பெயர், தமிழ் பண்பாட்டிற்கு உகந்ததாகவும், கண்ணியமானதாகவும் உள்ளதா என ஆய்வு செய்து பரிந்துரை செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டது.

2. அவ்வாறு திரைப்படங்களுக்கு தமிழில் பெயரிடப்பட்டால் மட்டுமே அத்திரைப்படங்களின் கதைக்கரு தமிழ் பண்பாட்டிற்கு உகந்ததாகவும், கண்ணியமானதாகவும் உள்ளது என உறுதி செய்ய இயலாத நிலையில் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் கீழ்க்கண்ட கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

(1) அவ்வாறான திரைப்படம், திரைப்பட தணிக்கை வாரியத்திடமிருந்து "U" சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

(2) திரைப்படத்தின் கதையின் கருவானது தமிழ் மொழி மற்றும் பண்பாட்டின் வளர்ச்சிக்கு உகந்ததாக இருத்தல் வேண்டும்.

(3) திரைப்படத்தின் தேவையை கருதி பிறமொழிகளை பயன்படுத்தும் காட்சிகளைத் தவிர பெருமளவில் திரைப்படத்தின் வசனங்கள் தமிழ் மொழியில் இருத்தல் வேண்டும்.

(4) திரைப்படத்தில் வன்முறை மற்றும் ஆபாசங்கள் அதிக அளவில் இடம் பெறுமேயானால் அத்திரைப்படம் வரிவிலக்கு பெறப்படுவதற்கான தகுதியை இழக்கும்.

மேற்கண்ட வரையறைகள், திரைப்படங்களுக்கு கேளிக்கை வரிவிலக்கு கோரப்பட்டு தற்போது நிலுவையில் உள்ள விண்ணப்பங்களுக்கும் பொருந்தும் எனவும், கேளிக்கை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்க வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய ஒரு புதிய தனிக்குழு ஏற்படுத்தப்படும் எனவும் ஆணை வழங்கப்பட்டது.

3. மேற்கண்ட ஆணைக்கிணங்க, கேளிக்கை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்க வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய கீழ்க்கண்ட அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் அடங்கிய ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழுவினை அமைத்து அரசு ஆணையிடுகிறது.

<u>அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்</u>

(1) செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அல்லது அவரால் நியமிக்கப்படும் வணிகவரித்துறை இணை ஆணையர் பதவி நிலைக்கு குறையாத ஓர் அலுவலர்.

(2) செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை அல்லது அவரால் நியமிக்கப்படும் தமிழ் வளர்ச்சி அல்லது கலை மற்றும் பண்பாட்டுத்துறை துணை இயக்குநர் பதவி நிலைக்கு குறையாத ஓர்அலுவலர்.

(3) இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை

<u>அலுவல் சாரா உறுப்பினர்கள்</u>

1. திரு.A.ஜெகன்னாதன், இயக்குநர்
2. திருமதி.M.N.ராஜம், பழம்பெரும் நடிகை
3. திரு. A.L.ராகவன், பழம்பெரும் பின்னணிப் பாடகர்
4. திரு. வர்மா, பழம்பெரும் ஒளிப்பதிவாளர்
5. திரு. R.V. உதயகுமார், இயக்குநர்
6. திரு. R.B.சௌத்ரி, படத் தயாரிப்பாளர்
7. திரு. C.V.ராஜேந்திரன், இயக்குநர்
8. திருமதி. ராஜஸ்ரீ, பழம்பெரும் நடிகை
9. திருமதி. வாணி ஜெயராம், பின்னணிப் பாடகி
10. திரு. செந்தில், நடிகர்
11. திரு. பாபு, ஒளிப்பதிவாளர்
12. திரு.V.S.ராகவன், பழம்பெரும் நடிகர்
13. திருமதி.S.N.லட்சுமி, பழம்பெரும் நடிகை
14. திரு. ராம்ஜீ, பத்திரிகையாளர்
15. திரு.P.வாசு, இயக்குநர்
16. திரு.K.T.குஞ்சுமோன், தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர்
17. திருமதி.K.S.சித்ரா, பின்னணிப் பாடகி
18. திருமதி. சௌகார் ஜானகி, பழம்பெரும் நடிகை
19. திருமதி. ராஜ சுலோசனா, பழம்பெரும் நடிகை
20. திரு.T.L.மகாராஜன், பின்னணிப் பாடகர்
21. செல்வி.L.R.ஈஸ்வரி, பின்னணிப் பாடகி
22. திரு. சங்கர் கணேஷ், இசையமைப்பாளர்

பார்வையிடப்படும் ஒவ்வொரு திரைப்படத்திற்கும் மேற்கண்ட தெரிவு செய்யப்பட்ட பெயர் பட்டியலிலிருந்து நான்கு உறுப்பினர்களை(இரண்டு ஆண் மற்றும் இரண்டு பெண்) வணிகவரி ஆணையர் சுழல்முறை அடிப்படையில் நியமனம் செய்வார்.

4. கேளிக்கை வரிவிலக்கு பெற திரைப்படத் தயாரிப்பாளர்கள் விண்ணப்பக் கட்டணமாக ரூ.10,000/–(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) செலுத்தி நேரடியாக வணிகவரி ஆணையருக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் தேர்வுக்குழு குறிப்பிடும் நாளில் குழு உறுப்பினர்களுக்கு திரைப்படங்களைத் தயாரிப்பாளர்கள் திரையிட்டுக் காண்பிக்க வேண்டும் என்றும் கேளிக்கை வரிவிலக்கிற்கான அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் அத்தகைய திரைப்படங்கள் கேளிக்கை வரிவிலக்கிற்கு தகுதி பெறும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

5. ஒரு திரைப்படத்தை குறைந்த பட்சம் அலுவல் சார்ந்த உறுப்பினர்களில் இரண்டு உறுப்பினர்களும், அலுவல் சாரா உறுப்பினர்களில் இரண்டு உறுப்பினர்களும் பார்வையிட வேண்டும். மேலும் உறுப்பினர்களை ஒருங்கிணைத்து திரைப்படங்களை பார்வையிடச் செய்து பெரும்பான்மை உறுப்பினர்கள் வழங்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் வரிவிலக்கிற்கான ஆணை வழங்கும் பொருட்டு அரசுக்கு அறிக்கை அனுப்பி வைக்கும்படி வணிகவரி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சுனீல் பாலீவால்**
**அரசுச் செயலாளர்.**

<u>பெறுநர்</u>

முதன்மைச் செயலாளர்/ வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
அனைத்து உறுப்பினர்கள்.
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.

நகல்:

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
முதுநிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (வ.வ.(ம) பதிவுத்துறை) அலுவலகம், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சித்துறை, சென்னை–9.
நிதித்துறை, சென்னை –9.
உள்துறை, சென்னை–9.
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
முதல்வர், எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், சென்னை–113.
பொது (சிறப்பு அ ) துறை சென்னை-9.
பொது (கடும் மந்தனம்) துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

3/1/2012
பிரிவு அலுவலர்.
03/01/12